1801

# யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்
## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2019

| தரம் : 06 | செயன்முறைத் தொழினுட்பத்திறன்கள் | நேரம் : 2.00 மணித்தியாலம் |
|---|---|---|
| | சுட்டெண் : ........................................................................ | |

பகுதி - I

- சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. வற்றாளைத் தாவரம் ஒன்றினைப் பயிரிடுவதற்குப் பயன்படுத்தப்படும் நடுகைப் பொருள்
   1) நன்கு முற்றிய கிழங்குகள் 2) தண்டுத் துண்டங்கள்
   3) வித்துக்கள் 4) முதிராத இளம் கிழங்குகள்

2. வீட்டுத் தோட்டத்தில் தாவரம் வளர்ப்பதனால்
   1) சுத்தமான புதிய உணவு பெறலாம்
   2) பறவைகளின் நடமாட்டத்தால் சுற்றாடல் அழகுறும்
   3) சுத்தமான வளியைப் பெற்றுக்கொள்ளலாம்
   4) அதிக பணம் செலவாகும்

3. அலங்கார இலைத் தாவரமாகக் கொள்ளப்படுவது
   1) சீனியாஸ், அந்தூரியம் 2) ஓர்க்கிட், காசித்தும்பை
   3) கலேதியா, சேம்பு 4) போகன்விலா, எக்சோரா

4. பயிர் செய் நிலத்தில் உயிருள்ள மூடுபடையாக அமைவது
   1) வல்லாரை 2) தென்னோலை 3) வைக்கோல் 4) வாழைமடல்

5. தாவரங்களுக்குச் சேதத்தை ஏற்படுத்தும் பிராணிகள்
   1) செண்பகம் 2) நத்தை 3) மண்புழு 4) தேனீ

6. தானியங்களும், கிழங்குகளும் உணவுக் கூம்பகத்தில்
   1) நுனிப்பகுதியில் உண்டு
   2) அடிப்பகுதியில் உண்டு
   3) கூம்பின் நடுப்பகுதியில் உண்டு
   4) குறைவாக உட்கொள்ளும் பகுதியில் உண்டு

7. புதிய உணவின் தரப்பண்பாக அமையாதது
   1) போசணைத் தரம் பாதுகாத்து இருப்பது
   2) இயற்கையான நிறம் மாற்றமடைந்து காணப்படல்
   3) உரிய மணம் உள்ளதாக இருத்தல்
   4) உரிய சுவை காணப்படுதல்

8. பழுதடைந்த மீனின் இயல்பு
   1) பிரகாசமான கண்கள் 2) உறுதியான செதில்கள்
   3) பூக்கள் சிவப்பு நிறமானது 4) அமத்தும்போது குழிவிழுதல்

9. முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட சமையல் அறையின் பண்புகள் அல்லாதது
   1) யன்னலின் அருகே கழுவும் தொட்டி அமைத்தல்
   2) முறையான நீர், மின் விநியோகம் காணப்படல்
   3) காற்று இறுக்கமான யன்னல் கதவுகள் காணப்படல்
   4) இடவசதிக்கு ஏற்ப அலகுகள் வேறாக்கல்

Education கல்வி அதியாபன

kalvi.lk

10. மேலதிகமான உணவுப் பொருட்களைப் பேணிப் பாதுகாப்பதன் மூலம் பெறப்படும் நன்மை அல்லாதது
   1) தட்டுப்பாடான காலங்களில் பயன்படுத்தல்
   2) நுண்ணுயிர்களின் தொற்றுக்கு உள்ளாதல்
   3) உணவுப் பல்வகைமைத் தன்மையை ஏற்படுத்தல்
   4) பொருளாதார நன்மை பெறல்

11. உணவு பழுதடைதலில் செல்வாக்குச் செலுத்தும் பௌதீகக் காரணி ஆவது
   1) பூஞ்சனம் 2) ஈரலிப்பு 3) பற்றீரியா 4) ஈஸ்ட்

12. ஆசிரியரின் மேசை ஒன்றைச் செய்வதற்குப் பயன்படும் மூலப்பொருள் ஆவது
   1) கைவாள், ஆணி 2) பலகை, ஆணி
   3) துளையிடு கருவி, சுத்தியல் 4) பலகை, உளி

13. மின் பற்றாக்சுக்கோல் பற்றிய கூற்றுக்களில் தவறானது
   1) இதன் முனை உருக்கினால் ஆனது
   2) இது மெல்லிய ஒட்டு வேலைக்குப் பயன்படுகின்றது
   3) இதன் முனை செப்பு உலோகத்தால் ஆனது
   4) மின்சாரம் மூலம் வெப்பமேற்றப்படுகிறது


14. நாம் உயிர் வாழ்வதற்கு அவசியமானதாகக் கருதமுடியாதது
   1) உணவு 2) மோட்டார் வாகனம்
   3) உடை 4) வீடு

15. இலாப நோக்கை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்கள்
   1) அரச வைத்தியசாலை 2) அரச பாடசாலை
   3) சில்லறை வியாபார நிலையம் 4) கூட்டுறவுச் சங்கம்

16. வளங்கள் வீண் விரையமாகும் சந்தர்ப்பம்
   1) போத்தல், பேணி முதலியன மீண்டும் மீண்டும் பயன்படுத்தல்
   2) பகலிலும், இரவிலும் அநாவசியமாக எரியும் மின்குமிழ்கள்
   3) வீட்டு நீர்க்குழாய்களின் திருகுபிடியை இறுகப் பூட்டிவிடுதல்
   4) மின் அழுத்தியை ஒரே தடவையில் பயன்படுத்தி உடைகளை அழுத்துதல்

17. ஓய்வு நேரத்தைப் பயனற்றதாகச் செலவு செய்யும் முறை
   1) காளான் வளர்த்தல் 2) வீட்டுத்தோட்டம் செய்தல்
   3) கால்துடைப்பம் தயாரித்தல் 4) தொலைக்காட்சி பார்த்தல்

18. நிதி நிறுவனங்களில் பணத்தைச் சேமிப்பதனால்
   1) தேவையானபோது பெறமுடியும் 2) பணத்திற்கான வட்டி பெறலாம்
   3) பணத்திற்குப் பாதுகாப்பு 4) பணத்தை மீண்டும் பெறுவது கடினமானது

19. முறைசாரா வடிவமானது
   1)  2)  3)  4) 

20. இரு பரிமானம் கொண்டவை
   1) தாயக்கட்டை 2) சவர்க்காரக் கட்டி
   3) கடித உறையின் விரிப்பு 4) தீப்பெட்டி

(20×1=20 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන

## பகுதி - II

❖ முதலாம் வினா உட்பட மூன்று வினாக்களுக்கு விடை தருக.

01) 1. செயன்முறைத் தொழினுட்பத்திறன்கள் பாடத்தில் உம்மால் செய்யப்பட்ட செயற்பாடு ஒன்றினைக் குறிப்பிடுக.
2. இச் செயற்பாட்டிற்குப் பயன்படுத்திய பொருட்களைக் குறிப்பிடுக.
3. இச் செயற்பாட்டிற்குப் பயன்படுத்திய கருவி, உபகரணங்களைத் தருக.
4. இச் செயற்பாட்டினால் பெற்ற அனுபவங்கள் 2 தருக.
5. இச் செயற்பாட்டின்போது உமக்கு ஏற்பட்ட இடர்பாடுகள் 2 தருக. (5×2=10 புள்ளிகள்)

02) 1. வீட்டுத் தோட்டம் செய்வதனால் பெறப்படும் நன்மைகள் 2 தருக.
2. தாவரங்களுக்கு நோய் பீடைத்தாக்கம் ஏற்படாது பாதுகாக்கச் செய்யக்கூடிய எளிய சிகிச்சை முறைகள் 2 தருக.
3. அலங்காரத் தாவரம் ஒன்றைச் சாடியில் நடுவதற்குப் பயன்படுத்தப்படும் நாற்றுக்சாடி ஊடகத்தில் அடங்குபவை எவை?
4. வீட்டுத் தோட்டத்தில் காணப்படும் பிராணிகள் நான்கு தருக.
5. வீட்டுத் தோட்டத்திற்கு வரும் பிராணிகளை வரவழைப்பதற்கு நாம் செய்யக்கூடிய உபாயங்கள் 2 தருக. (5×2=10 புள்ளிகள்)

03) "ஆரோக்கியமான வாழ்விற்குத் தரமான உணவு"
1. திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்ட சமையல் அறையினால் கிடைக்கும் நன்மைகள் 2 தருக.
2. சமையல் அறைச்சுவர், சமையலறை யன்னல் என்பவற்றிற்குப் பயன்படுத்தப்படும் குறியீட்டினை வரைந்து காட்டுக.
3. உணவுப் பொருட்களைப் பொதியிடுவதற்குப் பயன்படுத்தப்படும் பொதியிடு பதார்த்தங்கள் 2 தருக.
4. பழுதடைந்த உணவுப் பொருட்கள் எவ்வாறு காணப்படும்?
5. உணவு பழுதடையாது பாதுகாக்கும் முறைகள் 2 தருக. (5×2=10 புள்ளிகள்)

04) 1. வேலை செய்யும் நபரின் பாதுகாப்புத் தொடர்பாக பின்பற்றவேண்டிய நடைமுறைகள் 2 தருக.
2. பொருள் ஒன்றை ஆக்குவதற்குப் பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் 2 தருக.
3. மேற்குறிப்பிட்ட ஆயுதங்களின் பயன்பாடு யாது?
4. இருக்கை ஒன்றினைச் செய்வதற்றுப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் எவை?
5. குண்டூசி தாங்கி ஒன்றினை வகுப்பறையில் செய்யும்போது நீர் பயன்படுத்திய பொருட்களைத் தருக. (5×2=10 புள்ளிகள்)

05) 1. பொருட்கள் சேவைகளின் இரண்டு பிரதான பண்பு வேறுபாட்டினைத் தருக.
2. இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் 2 தருக.
3. ஓய்வு நேரத்தில் சுயதொழில் செய்வதனால் கிடைக்கும் அனுகூலங்கள் 2 தருக.

குடிசைக் கைத்தொழிலாக தும்புத்தடி தயாரிக்கும் ஒருவர் 10 தும்புத்தடி செய்வதற்குச் செலவாகும் தொகை பின்வருமாறு அமைந்தது.

| மூலப்பொருள் | அளவு | பணத்தொகை ரூபா |
|---|---|---|
| தும்பு | 10 கட்டு | 500.00 |
| கம்பு பிடி | 10 பிடி | 400.00 |
| தகரம் | 10 துண்டுகள் | 50.00 |
| இரும்பு ஆணி | 250 கிராம் | 50.00 |
| மொத்தச் செலவு | | |

kalvi.lk

4. மொத்தச் செலவினைக் காண்க.
5. ஒரு தும்புத்தடி செய்வதற்கான மூலப்பொருள் செலவினைக் காண்க. (5×2=10 புள்ளிகள்)

06) 1. ஒரு பொருளின் முப்பரிமானங்களும் எவை?
2. குறியீடு என்பது யாது?
3. இருபரிமானம் கொண்ட பொருட்கள் 2 தருக.
4. முறைசார் முறைசார வடிவங்களை ஒன்றுசேர்த்து அலங்காரத் தோற்றம் ஒன்றை வரைந்து காட்டுக. (2+2+2+4=10 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන


kalvi.lk




Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP
**075 287 1457**